**ஜூலை – 29**

# TNPSC துளிகள்


- இந்திய இரயில்வே நிர்வாகமானது, சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (ICF) ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் முதல் இரயில் பெட்டியை வெற்றிகரமாக பரிசோதனை செய்தது.
- தமிழ்நாடு வனத்துறையின் சமூக அடிப்படையிலான சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு முன்னெடுப்பு, உள்ளூர்ச் சமூகத்தின் ஈடுபாடு மூலம், கடலூர் அருகே உப்பனார் ஆற்றின் ஓரங்களில் தரமிழந்துள்ள ஓடையோரப் பகுதிகளுடன், பயன்படுத்தப்படாத ஓதங்களுக்கு இடைப்பட்ட தரிசு நிலத்தினையும் புனரமைத்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூலில் ஆளில்லா வான்வழி வாகனம் மூலம் துல்லியமாக ஏவப்படும் வழிகாட்டப்பட்ட எறிகணையின் (ULPGM)-V3 ஏவுதல் சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது.
- ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சீனக் குடிமக்களுக்கான சுற்றுலா நுழைவு இசைவுச் சீட்டுகளை இந்தியா மீண்டும் தொடங்க உள்ளது.
- உலக IVF தினம் அல்லது உலக கருவியல் நிபுணர் தினம் ஆனது, ஜூலை 25 ஆம் தேதி, செயற்கை கருவுறுதல் முறை (IVF) மூலம் பிறந்த உலகின் முதல் குழந்தையான லூயிஸ் பிரவுனின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- மத்தியப் பிரதேச அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் மற்றும் இந்திரா காந்தி தேசியப் பழங்குடியின பல்கலைக்கழகம் (IGNTU) ஆகியவை போபாலில் பஞ்சாயத்து அமைப்புகளின் விதிகள் குறித்த சிறப்பு மையம் (திட்டமிடப்பட்ட பகுதிகளுக்கு நீட்டிப்பு) சட்டம், 1996 (PESA) நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
    - அமர்கந்தக்கில் உள்ள IGNTU மையம் ஆனது, ஆராய்ச்சி, பயிற்சி, உள்ளாட்சித் திட்டமிடல் மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான கொள்கை வழிகாட்டுதல் மூலம் பழங்குடியின சுயாட்சியை ஆதரிக்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 3,000 ஹெக்டேர் பரப்பிலான சதுப்புநிலங்கள்

- 2022 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மாநிலம் ஆனது ஒன்பது கடலோர மாவட்டங்களில் 2,900 ஹெக்டேர்களுக்கு மேலான மரங்களை நட்டு சதுப்புநிலங்களை மீட்டெடுத்து உள்ளது.
- அதே நேரத்தில், குறிப்பாக திருவாரூரில் சுமார் 200 ஹெக்டேர் பரப்பிலான தரமிழந்த சதுப்புநிலங்கள் மீட்டெடுக்கப்பட்டன.
- அடுத்த ஆண்டில், 720 ஹெக்டேர் பரப்பிலான புதிய தோட்டங்கள் அமைக்கப்பட்டன என்பதோடு அதனுடன் சுமார் 732 ஹெக்டேர் பரப்பின் மறுசீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டன.
- 2024–25 ஆம் ஆண்டில், மேலும் கூடுதலாக சுமார் 275 ஹெக்டேர் பரப்பிலான புதிய தோட்டங்கள் பயிரிடப்பட்டது என்ற நிலையில் ஆண்டு இறுதிக்குள் மிக அதிக இலக்கு எட்டப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இம்மாநிலத்தின் 1,076 கிலோமீட்டர் கடற்கரை 14 மாவட்டங்களை உள்ளடக்கியது.

- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரியில், இந்தத் துறை ₹25 கோடி ஒதுக்கீட்டில் மூன்று ஆண்டு சதுப்பு நில மறுசீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- இப்பகுதியில் இருந்து பெரும்பாலும் காணாமல் போன சோனெரேஷியா அபெட்டாலா, சைலோகார்பஸ் கிரானேட்டம் மற்றும் கண்டேலியா கேண்டல் போன்ற சில அரிய வகை இனங்களை மீண்டும் அறிமுகப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தப் பட்டு உள்ளது.
- காற்று மற்றும் அலை மீதான நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க சதுப்புநிலங்களுடன் சேர்த்து, பனை மற்றும் முந்திரி போன்ற சில மரங்களைப் பயன்படுத்தி உயிரி-கவசத் தோட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- சதுப்புநிலத் தோட்ட முயற்சிகள் தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றப் பதிலுக்கான பசுமையாக்கும் திட்டம் (TBGPCCR), இழப்பீட்டுக் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம் (CAMPA), சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT) மற்றும் பிற மத்திய நிதியுதவி திட்டங்களின் ஒரு பகுதியாக மேற் கொள்ளப்பட்டன.





## TN Spark முன்னெடுப்பு




- தமிழ்நாடு அரசானது, சமீபத்தில் TN Spark முன்னெடுப்பின் கீழ் பாடப்புத்தகங்களை அறிமுகப்படுத்தியது.

- TN Spark என்பது தமிழ்நாடு பள்ளி செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல்/ரோபாட்டிக்ஸ் மற்றும் இயங்கலை செயற்கருவிகள் பற்றிய அறிவுக்கான திட்டத்தைக் குறிக்கிறது.
- இது 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கணினி அறிவியல், இயங் கலை கருவிகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் குறியீட்டு முறையின் அடிப்படை முறைகளை அறிமுகப்படுத்துகிறது.

## 2025-2026 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய்




- 2025-2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் சுமார் 14.5% அதிகரித்து 43,070.45 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் இருந்த 37,605.43 கோடி ரூபாயிலிருந்து தற்போது இது 43,070.45 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் மாநிலங்களின் சொந்த வரி வருவாய் (SOTR) 75.3% ஆகும்.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் SOTR, ஒன்றிய அரசின் வரிகளின் பங்கு, வரி சாராத வருவாய் மற்றும் மானிய உதவிப் பங்களிப்பு ஆகியவை அடங்கும்.
- தலைமை கணக்காளர் மற்றும் தணிக்கையாளர் (CAG) அலுவலகத்தின் தற்காலிகப் புள்ளி விவரங்களின்படி இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.
- SOTR கூறுகளில், மாநிலத்தின் சரக்கு மற்றும் சேவை வரி (SGST) வசூல் கிட்டத்தட்ட 21% அதிகரித்துள்ளது.
- பிற வரிகள் மற்றும் கட்டணங்களிலிருந்து வரும் வருவாய் சுமார் 23.9% அதிகரித்துள்ளது.
- பத்திரங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களிலிருந்து வரும் வருவாய் 19.3% அதிகரித்துள்ளது.
- மாநிலக் கலால் வரிகள் (மதுபான வருவாயை உள்ளடக்கும்) 2,904.47 கோடி ரூபாயாக அதிகரித்தன.
- விற்பனை மற்றும் வர்த்தகம் போன்ற உள் வரிகளிலிருந்து (பெட்ரோல் மற்றும் டீசல் மற்றும் மதுபானம் மீதான VAT உட்பட) வருவாய் வசூல் 7.8% அதிகரித்துள்ளது.

- நில வருவாய் 2025-2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 51.83 கோடி ரூபாயாக அதிகளவில் குறைந்துள்ளது.
- மாநில அரசு ஆனது 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மதிப்பீடுகளில், SOTR 2,20,894.58 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று கணித்துள்ளது.
- 2024-2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளான 1,92,752.43 கோடி ரூபாயிலிருந்து இது 14.6% அதிகமாகும்.
- 2025-2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு 13,296.29 கோடி ரூபாயாக இருந்தது.
- வருவாய்ப் பற்றாக்குறை என்பது செலவுகள் வரவுகளை விட அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது.
- நிதிப் பற்றாக்குறை என்பது மொத்த வரவுகளுக்கும் மொத்த செலவினங்களுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

## நான்கு செப்புத் தகடு கல்வெட்டுகள்




- இதுவரை கிடைத்த இராஜேந்திர சோழனின் காலத்தினைச் சேர்ந்த மிகவும் மதிப்பு மிக்கப் பதிவுகளில், நான்கு செப்புத் தகடு கல்வெட்டுகள் வெவ்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- திருவாலங்காடு செப்புத் தகடுகள், கரந்தை செப்புத் தகடுகள், திருக்களார் செப்புத் தகடுகள் மற்றும் எசாலம் செப்புத் தகடுகள் சோழ வம்சாவளி, கோயில் நன்கொடைகள் மற்றும் இராணுவப் படையெடுப்புகளை எடுத்துக் காட்டுகின்றன.
- இராஜராஜ சோழனின் மகன் முதலாம் இராஜேந்திர சோழன், சோழப் பேரரசின் எல்லைகளை இந்திய துணைக் கண்டத்திற்கு அப்பால் விரிவுபடுத்தினார்.
- தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் இராணுவ வெற்றிகளைப் பெற்றது மட்டுமல்லாமல், தாராளமான நில மானியங்கள் மற்றும் கோயில்களுக்கான ஆதரவும் அவரது ஆட்சியை சிறப்புப்படுத்தின (கி.பி. 1012-1044).
- இந்தக் கல்வெட்டுகள் சோழ வம்சாவளி, கோயில் நன்கொடைகள் மற்றும் இராணுவப் படையெடுப்புகள் குறித்து வெளிக் கொணர்கின்றன.
- வே. மகாதேவன் மற்றும் கா. சங்கரநாராயணன் (தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) எழுதிய சோழர் செப்பேடுகள் மற்றும் முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி M. இராஜேந்திரன் (அகனி பதிப்பகம்) எழுதிய சோழர் காலச் செப்பேடுகள் ஆகிய புத்தகங்கள், பல்வேறு சோழ மன்னர்களின், குறிப்பாக இராஜேந்திர சோழரின் செப்புத் தகடு கல்வெட்டுகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

### திருவாலங்காடு செப்புத் தகடுகள்

- திருவாலங்காடு செப்புத் தகடுகள் முதன்முதலில் 1903-04 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் (ASI) வருடாந்திர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்தத் தகடுகள் பின்னர் கல்வெட்டு நிபுணர் ராவ் பகதூர் H. கிருஷ்ண சாஸ்திரியின் தென்னிந்திய கல்வெட்டுகள் புத்தகத்தின் மூன்றாம் தொகுதியில் வெளியிடப் பட்டன.
- 31 செப்புத் தகடுகள் இருந்த இந்தத் தொகுப்பில், முதல் 10 சமஸ்கிருதத்திலும் மீதமுள்ள 21 தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளன.
- இக்கல்வெட்டு சமஸ்கிருதப் பிரிவு, முதல் தமிழ்ப் பிரிவு மற்றும் இரண்டாவது தமிழ்ப் பிரிவு என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
- கல்வெட்டு நிபுணர் V. வெங்கையாவின் கூற்றுப்படி, தமிழ்ப் பிரிவுகள் முந்தைய காலத்தினைச் சேர்ந்ததாகவும், சமஸ்கிருதப் பிரிவு பின்னர் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- இரண்டாவது தமிழ்ப் பிரிவு முதலாம் இராஜேந்திர சோழனின் ஆறாவது ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது என்பதால் இது கி.பி 1018 ஆம் ஆண்டில் வைக்கப்பட்டது.
- இத்தகடுகள் அரசச் சின்னங்களுடன் கூடிய வட்ட வடிவ செப்பு முத்திரையால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன.
- இது ஓர் கவிகையின் இரு புறமும் இரண்டு கவரிகள், ஒரு புலி (சோழ சின்னம்), இரண்டு மீன்கள் (பாண்டிய சின்னம்), ஒரு வில் (சேர சின்னம்), ஒரு பன்றி (சாளுக்கிய சின்னம்), ஒரு ஸ்வஸ்திகம் மற்றும் இரண்டு விளக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்தத் தகடுகள், இராஜேந்திர சோழன் (திருவள்ளூர் மாவட்டத்தில்) திருவாலங்காடு சிவன் கோயிலுக்கு பழையனூர் கிராமத்தைப் பரிசாக வழங்கிய அரச உத்தரவைப் பதிவு செய்தன.

### கரந்தை செப்புத் தகடுகள்

- தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தாலுக்காவில் உள்ள அம்மாபேட்டைக்கு அருகிலுள்ள புதூர் கிராமத்தில் உள்ள ஒரு வயலில் கரந்தை செப்புத் தகடுகள் கண்டெடுக்கப்பட்டன.
- ஆரம்பத்தில் புதூர் செப்புத் தகடுகள் என்று அழைக்கப்பட்ட இவை, 1940 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தஞ்சாவூருக்கு அருகிலுள்ள கருந்தட்டான்குடியில் கரந்தை தமிழ் சங்கத்தினால் பாதுகாக்கப்பட்ட பின்னர் இவ்வாறு மறுபெயரிடப்பட்டன.
- அவை அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சேவு பாண்டியனுக்குச் சொந்தமான நிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.
- 111.73 கிலோகிராம் எடையுள்ள 57 செப்புத் தகடுகள் இருந்த இந்தத் தொகுப்பானது, இரண்டு பெரிய செப்பு வளையங்களால் இணைக்கப்பட்டு இருந்தது, அவற்றில் ஒன்று உடைந்து இருந்தது.
- மீதமுள்ள வளையத்தில் சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள் மற்றும் சாளுக்கியர்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட அரச முத்திரை, விளக்குகள், அரச குடையாணி மற்றும் கவரிகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.
- 54 தமிழ்த் தகடுகளுள் பலவற்றில் 'திரிபு' என்ற வார்த்தை பொறிக்கப்பட்டுள்ளது.
- இது இராஜேந்திர சோழனின் தாயாரின் நினைவாகப் பெயரிடப்பட்டுப் பரிசளிக்கப்பட்ட கிராமமான திரிபுவன மகாதேவி சதுர்வேதிமங்கலத்தைக் குறிக்கிறது.

### திருக்களார் செப்புத் தகடுகள்

- திருக்களார் செப்புத் தகடுகள் திருக்களாரில் உள்ள பாரிஜாதவனேஸ்வரர் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்டன.
- இது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியிலிருந்து தென்கிழக்கே சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு கிராமம் ஆகும்.
- இந்தக் கோயிலில் தமிழில் பொறிக்கப்பட்ட ஐந்து செப்புத் தகடுகள் மற்றும் 23 கல்வெட்டுகள் இருந்தன, இவை அனைத்தும் சோழர் காலத்தைச் சேர்ந்தவை.
- அவற்றில் முதன்மையானது கி.பி 1030 (இராஜேந்திர சோழனின் 18வது ஆட்சி ஆண்டு) தேதியிட்டது ஆகும்.
- இந்தத் தகடுகள் திருக்களாரில் உள்ள மகாதேவர் கோயிலுக்கு வழங்கப் பட்ட நில மானியத்தை விவரிக்கின்றன.
- இது 'அருள்மொழி தேவ வளநாட்டில்' உள்ள 'புறங்காரன்பை நாட்டின்' ஒரு பகுதியாகும்.

***எசாலம் செப்புத் தகடுகள்***

- 1987 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதியன்று திண்டிவனம் அருகே உள்ள எசாலத்தில் சிவன் கோயிலின் புனரமைப்பின் போது எசாலம் செப்புத் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- மூன்று வகையான வரலாற்று கலைப்பொருட்களும் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் தளம் எசாலம் ஆகும்.
- இதே போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று பொருட்கள் பின்னர் 2010 ஆம் ஆண்டில் (மயிலாடுதுறை மாவட்டத்தில்) திரு இந்தளூரில் கண்டுபிடிக்கப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறை, இத்தகடுகளை ஆய்வு செய்து, அவை இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவை என்பதை உறுதிப்படுத்தியது.
- அவை கி.பி 1036 (அவரது 24வது ஆட்சி ஆண்டு) தேதியிட்டவை ஆகும்.
- வெண்கல சிலைகளில் இராஜேந்திர சோழனின் குருவாக நம்பப்படும் சர்வ சிவ பண்டிதரின் சிலை இருந்தது.
- இரண்டு பக்கங்களிலும் பொறிக்கப்பட்ட இந்தத் தகடுகள், விளக்குகள், அரச குடையாணி மற்றும் கவரிகள் ஆகியவற்றுடன் சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள் மற்றும் சாளுக்கியர்களின் சின்னங்களைத் தாங்கிய முத்திரையுடன் கூடிய செப்பு வளையத்தால் கட்டப்பட்டிருந்தன.
- இக்கல்வெட்டுகள் சமஸ்கிருதத்தில் இராஜேந்திர சோழனின் வம்சாவளிக் காலத்தைக் குறிப்பிட்டு தொடங்கப்பட்டன.
- சர்வ சிவ பண்டிதர் கட்டிய கோயிலுக்கு அவர் வழங்கிய நில மானியங்களை தமிழ்ப் பகுதி விவரித்தது மற்றும் அவரது ஆட்சிக் காலத்தில் கைப்பற்றப்பட்டப் பகுதிகளையும் அது பட்டியலிட்டது.
- அவரது 'மெய்கீர்த்தி' (அரசப் புகழாரம்) ஆனது, பிரபலமான வித்யாதர தோரணம் கடாரத்திலிருந்து (மலேசியாவில் உள்ள கடா) கொண்டு வரப் பட்டது என்று கூறுகிறது.

# தேசியச் செய்திகள்

## தேசிய தொலைத்தொடர்புக் கொள்கை 2025 வரைவு

- தொலைத்தொடர்புத் துறையானது (DoT) 2025 ஆம் ஆண்டு தேசிய தொலைத்தொடர்பு கொள்கை வரைவை வெளியிட்டுள்ளது.


- இது மிகவும் பாதுகாப்பான, புதுமையான மற்றும் நிலையான தொலைத்தொடர்பு வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் 1 மில்லியன் பொது அருகலை/Wi-Fi மையங்களை அமைப்பதுடன், 90% அளவில் 5G மற்றும் 100% 4G பயன்பாட்டுப் பரவலை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- 10 லட்சம் (1 மில்லியன்) புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், தற்போதுள்ள 10 லட்சம் தொலைத் தொடர்பு ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் என்று இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- ஒரு பிரத்தியேக தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலத்தின் (TMZ) ஆதரவுடன் உள் நாட்டு உற்பத்தி 150% வளர்ச்சி பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.
- கார்பன் தடப் பதிவு 30% குறைத்தல் மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்களில் மறு சுழற்சி நடைமுறைகளை ஏற்றுக் கொள்வது முக்கிய நிலைத்தன்மை இலக்குகள் ஆகும்.
- இந்தக் கொள்கையானது, உலகளாவிய 6G தரப்படுத்தலில் இந்தியப் பங்களிப்பை ஊக்குவிக்கிறது மற்றும் தொலைதூரப் பகுதிகளில் செயற்கைக்கோள் வழியிலான இணையத்தை ஊக்குவிக்கிறது.




## இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு - தொலைநோக்குக் கொள்கை 2035

- ஐக்கியப் பேரரசு மற்றும் இந்தியாவின் பிரதமர்கள் 2035 ஆம் ஆண்டு இந்தியா-ஐக்கியப் பேரரசு தொலைநோக்குத் திட்டத்தினை இலண்டனில் வெளியிட்டனர்.
- இந்தத் திட்டமானது வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு, கல்வி மற்றும் பருவநிலை ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான 10 ஆண்டு காலத் திட்டமாகும்.
- விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA) எனப்படும் இந்தியா-ஐக்கியப் பேரரசு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட்ட உடனேயே இந்த அறிவிப்பு வெளிவந்தது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தினை சுமார் 56 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து சுமார் 100 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிப்பதே FTA ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- 2035 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டமானது, தெளிவான காலக்கெடுவையும், முன்னேற்றத்தைக் கண்காணிக்க வழக்கமான மதிப்பாய்வுகளையும் அமைக்கிறது.
- இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரம், நிதிச் சேவைகள், பாதுகாப்பு உற்பத்தி மற்றும் படைப்பாக்கத் தொழில்களில் மிகுந்த ஒத்துழைப்பை அதிகரிக்கும்.

- ஐக்கியப் பேரரசு - இந்தியா நிதிக் கூட்டாண்மை உட்பட வணிகப் பேச்சு வார்த்தைகளை ஊக்குவிக்கவும், உள்கட்டமைப்பு முதலீடுகளை ஆதரிக்கவும் இந்த இரு நாடுகளும் தளங்களை உருவாக்க உள்ளன.
- ஐக்கியப் பேரரசு-இந்தியா செயற்கை நுண்ணறிவு (AI) மையத்தை நிறுவும் திட்டங்களுடன் புதுமையில் முக்கியக் கவனம் செலுத்தப் படுகிறது.
- துளிமக் கணினி, இணையவெளிப் பாதுகாப்பு, உயிரி தொழில்நுட்பம், குறைக் கடத்திகள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்படும்.
- இந்த முயற்சிகள் அறிவியல் மற்றும் புத்தாக்கச் சபையினால் வழி நடத்தப் படும்.
- ஹைட்ரஜன், மின் கலத் தொழில்நுட்பம், கார்பன் பிடிப்பு, கடற்கரைக் காற்று மற்றும் சிறிய அணு உலைகள் போன்ற சுத்தமான எரிசக்தித் திட்டங்களில் இரு நாடுகளும் ஒத்துழைக்கும்.
- இந்த முன்னெடுப்புகள் நிகரச் சுழிய புத்தாக்கக் கூட்டாண்மையின் ஒரு பகுதியாகும்.
- உலக வர்த்தக அமைப்பில் (WTO) உலகளாவிய வர்த்தக விதிகளைச் சீர்திருத்துவதில் இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் இணைந்து செயல்படும்.
- விமானப் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்தவும், நாடுகளுக்கு இடையே வரி வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் அவை திட்டமிட்டுள்ளன.
- ஐக்கியப் பேரரசின் கார்பன் எல்லை இணக்க முறைமையிலிருந்து (CBAM) இந்தியா விலக்கு பெறவில்லை.
- 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், எஃகு மற்றும் அலுமினியம் போன்ற அதிக கார்பன் உமிழ்வு கொண்ட இறக்குமதிகளுக்கு CBAM வரி விதிக்கும்.
- இது சுமார் 775 மில்லியன் டாலர் மதிப்புள்ள இந்திய ஏற்றுமதிகளைப் பாதிக்கலாம்.




## மிக நீண்ட காலம் பதவி வகித்த 2வது பிரதமர்

- பிரதமர் நரேந்திர மோடி 2025 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதியன்று தொடர்ச்சியாக 4,078 நாட்கள் பதவியில் இருந்தார்.
- 1966 ஆம் ஆண்டு ஜனவரி 24 முதல் 1977 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி வரை

தொடர்ச்சியாக 4,077 நாட்கள் பதவி வகித்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் சாதனையை அவர் முறியடித்தார்.

- ஜவஹர்லால் நேருவுக்கு அடுத்தபடியாக, இந்திய வரலாற்றில் தொடர்ச்சியாக நீண்ட காலப் பிரதமராகப் பணியாற்றிய இரண்டாவது நபர் மோடி ஆவார்.
- ஜவஹர்லால் நேரு அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 1964 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதி வரை தடையின்றி பிரதமராகப் பணியாற்றினார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு பிறந்த முதல் மற்றும் ஒரே பிரதமர் நரேந்திர மோடி ஆவார் (ஆகஸ்ட் 15, 1947).
- இந்திய தேசிய காங்கிரஸ் (INC) சாராத பிரதமர்களில் மிகவும் நீண்ட காலம் பதவி வகித்தவர் இவர் தான்.
- அதிக காலம் பதவி வகித்த இந்தி மொழி பேசாத மாநிலத்தினைச் சேர்ந்த பிரதமர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு.
- இரண்டு முழு பதவிக் காலங்களை நிறைவு செய்து, மக்களவையில் முழுப் பெரும்பான்மையுடன் இரண்டு முறை மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய காங்கிரஸ் கட்சியைச் சாராத ஒரே தலைவர் மோடி ஆவார்.
- ஜவஹர்லால் நேருவைத் தவிர, ஓர் அரசியல் கட்சியின் தலைவராக தொடர்ச்சியாக மூன்று பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்ற ஒரே பிரதமர் மோடி ஆவார்.
- அனைத்துப் பிரதமர்கள் மற்றும் முதலமைச்சர்களுள், 2002, 2007 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குஜராத் சட்டமன்றத் தேர்தல்கள் மற்றும் 2014, 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மக்களவைத் தேர்தல்கள் எனத் தொடர்ச்சியாக ஆறு தேர்தல்களில் கட்சித் தலைவராக வெற்றி பெற்ற ஒரே இந்தியத் தலைவர் இவரே ஆவார்.
- 2001 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை குஜராத்தின் முதலமைச்சராக பணி ஆற்றிய மோடி, பின்னர் 2014 ஆம் ஆண்டில் பாஜகவை தேசிய அளவிலான வெற்றிக்கு இட்டுச் சென்றார்.



## தேசியக் கூட்டுறவுக் கொள்கை 2025




- மத்திய உள்துறை அமைச்சகமானது, 2025 ஆம் ஆண்டு தேசியக் கூட்டுறவு கொள்கையினை அறிமுகப்படுத்தியது.
- இந்தப் புதிய கொள்கையானது 23 ஆண்டுகளுக்கு முன்பு அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசாங்கத்தின் போது உருவாக்கப் பட்ட முந்தைய கூட்டுறவு கொள்கைக்கு மாற்றாக அமைகிறது.
- இந்தக் கொள்கையானது 2025 ஆம் ஆண்டு முதல் 2045 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் கூட்டுறவுத் துறையை 'சஹர்கர் சே சம்ரிதி' (ஒத்துழைப்பு மூலம் செழிப்பு) என்ற தொலைநோக்குப் பார்வையுடன் வழி நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது அடித்தளத்தை வலுப்படுத்துதல், புத்துயிர்ப்பினை ஊக்குவித்தல், எதிர்காலத்திற்காக கூட்டுறவுகளைத் தயார் செய்தல், உள்ளடக்கத்தை மேம்படுத்துதல், புதிய துறைகளில் விரிவாக்கங்களை மேற்கொள்ளுதல் மற்றும் இளைஞர்களைக் கூட்டுறவு மேம்பாட்டில் ஈடுபடுத்துதல் ஆகிய ஆறு தூண்களைச் சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்ட கூட்டுறவுத் துறை அமைச்சகமானது, 1979 ஆம் ஆண்டு முதல் வேளாண் அமைச்சகத்திலிருந்து பிரிக்கப் பட்டது.
- சகரித மந்திராலயம் என்று அழைக்கப்படும் இந்த அமைச்சகம், 'சஹகர் சே சம்ரிதி' என்ற முழக்கத்தின் கீழ் செயல்படுகிறது மற்றும் அதன் தொடக்கத்திலிருந்தே மாபெரும் சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

## பால்னா திட்ட விரிவாக்கம்

- இந்தியா முழுவதும் குழந்தைப் பராமரிப்பு ஆதரவை வலுப்படுத்துவதற்காக வேண்டி பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது பால்னா திட்டத்தை பணி புரியும் தாய்மார்களுக்கும் விரிவுபடுத்துகிறது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டமானது,

- பால்னா திட்டமானது சக்தி மிஷன் என்ற முதன்மைத் திட்டத்தின் சமர்த்ய எனும் உட்பிரிவின் கீழ் செயல்படுகிறது.
- 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, அணுகக் கூடிய மற்றும் முழுமையான பகல்நேர பராமரிப்புச் சேவைகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் இதனால் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்புகள் குறித்த கவலைகள் இல்லாமல் பணியிடத்தில் பங்கேற்க முடியும்.
- இந்தத் திட்டமானது பகல்நேரப் பராமரிப்பு, ஊட்டச்சத்து, நோய்த்தடுப்பு, அறிவாற்றல் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான சூழலில் மிக வழக்கமான சுகாதாரக் கண்காணிப்பு போன்ற சேவைகளை வழங்குகிறது.
- பால்னா திட்டம் என்பது வேலைவாய்ப்பு நிலையைப் பொருட்படுத்தாமல் அனைத்துத் தாய்மார்களுக்கும் இந்தச் சேவையை வழங்குகிறது மற்றும் அனைவருக்கும் இது கிடைக்கப் பெறும்.





# சர்வதேசச் செய்திகள்

## காற்று மாசுபாட்டைச் சமாளிப்பதற்கான உலகளாவிய கொள்கை அறிக்கைகள்

- உலகளவில் காற்று மாசுபாட்டின் சுகாதார பாதிப்புகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய அறிவியல் மற்றும் கொள்கை அறிக்கைகளை (SPS) உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொலம்பியாவின் கார்டஜெனாவில் நடைபெற்ற காற்று மாசுபாடு மற்றும் சுகாதாரம் குறித்த இரண்டாவது WHO உலகளாவிய மாநாட்டைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இந்த SPS ஆவணங்கள் துறை சார்ந்த கொள்கை வழிகாட்டுதலை குறிப்பாக காற்று மாசுபாட்டால் விகிதாச்சாரச் சுமையை எதிர்கொள்ளும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.
- SPS அறிக்கைத் தொடர் ஆனது, சமீபத்திய அறிவியல் சான்றுகளை அரசாங்கங்கள் மற்றும் முடிவெடுப்பவர்களுக்கு செயல்படுத்தக் கூடிய கொள்கைப் பரிந்துரைகளாக

வழங்குகிறது.

❖ WHO ஆனது, காற்றின் தரத்திற்கு கணிசமாக பங்களிக்கின்ற போக்குவரத்து, எரிசக்தி, கழிவு மேலாண்மை மற்றும் வேளாண்மை போன்ற துறைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகளை இயக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பசுமை எரிசக்தித் துறையில் முன்னணித்துவம்




❖ 2024 ஆம் ஆண்டில் மற்ற எல்லா நாடுகளையும் விட அதிகமான காற்றாலை விசையாழிகள் மற்றும் சூரிய மின்கலங்களை சீனா நிறுவியது.

❖ சீனாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் புரட்சி பல தசாப்த கால மூலோபாய அரசுத் திட்டமிடல் மற்றும் புதுமைகளில் அதிகப்படியான முதலீடுகளின் விளைவாகும்.

❖ சீனாவின் பசுமைப் புரட்சி ஆனது எரிசக்திப் பாதுகாப்பின்மை பற்றிய கவலைகளுடன் மிக அதிக அளவிலான காற்று மாசுபாட்டின் பெருகிவரும் நெருக்கடியினால் மேற்கொள்ளப்பட்டது.

❖ மேலும், வெளிநாட்டு எண்ணெயைச் சார்ந்திருக்கும் நிலை அதிகரித்து வருவது எரிசக்தி பாதுகாப்பு குறித்த கவலைகளைத் தூண்டியது.

❖ சீனாவின் எண்ணெய் இறக்குமதிகள் பெரும்பாலும் மேற்கு ஆசியா மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி மற்றும் தென் சீனக் கடல் வழியான கப்பல் பாதைகளைச் சார்ந்துள்ளது.

❖ 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சோதனைத் திட்டங்களுடன் தொடங்கி, சீனா தற்போது சூரிய சக்தி மின் உற்பத்தி தகடுகள் மற்றும் மின் கல உற்பத்தியில் முன்னணியில் உள்ளது.

❖ 2024 ஆம் ஆண்டில் மட்டும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கு சீனா குறிப்பிடத்தக்க அளவில் 940 பில்லியன் டாலரை ஒதுக்கியது.

- இது 2006 ஆம் ஆண்டில் 10.7 பில்லியன் டாலர் என்ற ஆரம்ப கால முதலீட்டிலிருந்து தொடங்கியது.
- இதனுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை 2024-25 ஆம் ஆண்டில் மொத்தமாக 3.4 பில்லியன் டாலர் முதலீட்டைப் பெற்றது.
- இது இரு நாடுகளுக்கும் இடையிலான அதிகப்படியான இடைவெளியை எடுத்துக் காட்டுகிறது.
- எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர் மன்றத்தின் தகவலின் படி இந்தத் தகவல் கூறப்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## TRACERS கலம்




- நாசாவின் டேன்டெம் மறு இணைப்பு மற்றும் கஸ்ப் மறு ஆய்வு செயற்கைக்கோள்கள் (TRACERS) கலம் ஆனது, ஸ்பேஸ்எக்ஸ் பால்கன் 9 ஏவு கலத்தின் மூலம் விண்ணில் ஏவப் பட்டது.
- TRACERS ஆனது காந்த மறு இணைப்பை ஆய்வு செய்யும் இரட்டை விண்கலங்களைக் கொண்டுள்ளது.
- காந்த மறு இணைப்பு என்பது சூரியக் காற்று ஆனது காந்த விளிம்பு மண்டல எல்லையில் பூமியின் காந்தப்புலத்துடன் தொடர்பு கொள்ளும் ஒரு முக்கியச் செயல் முறையாகும்.
- காந்த மறு இணைப்பு என்பது செயற்கைக் கோள்கள், மின் கட்டமைப்புகள் மற்றும் GPS அமைப்புகளை பாதிக்கும் விண்வெளி சார் வானிலை விளைவுகளை உண்டாக்குகின்ற காந்தப்புலங்கள் எவ்வாறு துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைக்கப் படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- TRACERS மற்ற சிறிய செயற்கைக்கோள்களுடன் சேர்ந்து ஏவப்படுகிறது, அவற்றில் பின்வருவன அடங்கும்:
  - பூமியின் வெப்ப உமிழ்வு மற்றும் பருவநிலையை ஆய்வு செய்வதற்கான Economical Payload Integration Cost (EPIC) கலம்.

- புதிய விண்வெளி தொடர்பு வலையமைப்பு மாற்றத்தைச் சோதிக்கின்றப் பல மொழிப் பரிசோதனை முனையம் (PexT).
- பூமியைச் சுற்றியுள்ள தீங்கு விளைவிக்கும் "கில்லர் எலக்ட்ரான்களை" பகுப்பாய்வு செய்கின்ற சார்பியல் எலக்ட்ரான் வளிமண்டல இழப்பு (REAL) ஆய்வுக் கலம்.

# முக்கிய தினங்கள்

## உலகச் சதுப்புநில தினம் 2025 - ஜூலை 26

- இது யுனெஸ்கோ அமைப்பினால் 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது சதுப்புநிலங்களின் பெரு முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது மற்றும் அவற்றின் நிலையான பாதுகாப்பை ஊக்குவிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Protecting Wetlands for Our Future" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## தாய்லாந்து - கம்போடியா எல்லை மோதல்

- தா முயென் தோம் என்ற கோயிலின் மீதான உரிமை கோரல் காரணமாக தாய்லாந்து-கம்போடியா எல்லையில் மோதல்கள் வெடித்தன.
- இந்த மோதல் ஆனது 11 ஆம் நூற்றாண்டின் இந்துக் கோவிலான பிரியா விஹார் மீதான இரு நாடுகளின் உரிமைக் கோரலை மையமாக கொண்டுள்ளது.
- சர்வதேச நீதிமன்றம் (ICJ) ஆனது 1962 ஆம் ஆண்டில் முடிவு செய்து 2011 ஆம் ஆண்டில் அந்தக் கோயில் கம்போடியாவிற்குச் சொந்தமானது என்று மீண்டும் ஒரு முறையாக உறுதிப் படுத்தியது ஆனால் தாய்லாந்து அதனைச் சுற்றியுள்ள நிலத்தின் மீது உரிமை கோருதலை முன் வைக்கிறது.
- கெமர் பேரரசால் கட்டப்பட்ட இந்தக் கோயிலானது கலாச்சாரப் பெருமையின் பெரும் அடையாளமாகவும், தேசியவாத பதட்டச் சூழலுக்கான ஓர் இடமாகவும் உள்ளது.


ANCIENT HINDU TEMPLE
AT CENTER OF ESCALATING
THAILAND-CAMBODIA
BORDER CONFLICT

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆